# சர்வதேச பொது மன்னிப்பு சபை

# மரண தண்டனைகள் நிறுத்திவைக்கப்படுதல்

## ஐ.நா. பொதுச் சபைத் தீர்மானம் 62/149

**18 டிசம்பர் 2007 AI Index: ACT 50/020/2007**

18 டிசம்பர் 2007 அன்று ஐ.நா. பொதுச் சபை 62/149 என்ற பதிவிலக்கத்தின் கீழ் ஒரு முக்கிய தீர்மானத்தை நிறைவேற்றியது, மரணதண்டனைகள் நிறைவேற்றப்படுவது நிறுத்திவைக்கப்பட வேண்டும் என்று அத்தீர்மானம் கோரியது. மிகப் பெரிய பெரும்பான்மையுடன் இத்தீர்மானம் நிறைவேறியது. ஆதரவாக 104 வாக்குகளும், எதிராக 54 வாக்குகளும் விழுந்தன. 29 பேர் வாக்களிக்கவில்லை.

தீர்மானம் 62/149ன் எழுத்தாக்கம் இது. சர்வதேச பொதுமன்னிப்பு சபையால் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கருத்து உலக அளவில் மேலோங்கிவருவதற்கு இத்தீர்மானம் மேலுமொரு ஆதாரம். ஐ.நா.பொதுச் சபையில் இவ்விவகாரம் கடைசியாக விவாதிக்கப்பட்டது 1999ல்தான். அதன் பின்னர் எவ்வாறு மரண தண்டனை ஒழிப்புக்கு ஆதரவாக உலக அளவில் கருத்தோட்டம் நகர்ந்துவருகிறது என்பதை செயல்முறையில் எடுத்துக்காட்டுவதாய் இது அமைந்துள்ளது.

பொதுச் சபையே,

ஐ.நா.மன்ற சாசனத்தில் இடம்பெற்றுள்ள நோக்கங்கள் மற்றும் நெறிகளின் *வழிகாட்டுதலுடனும்,* மனித உரிமைகளுக்கான உலக தீர்மானத்தையும்[i] சிவில் மற்றும் அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச

ஒப்பந்தத்தையும்[ii] குழந்தைகளின் உரிமைகள் குறித்த ஒப்பந்தத்தையும்[iii] *நினைவுகூர்ந்தும்,*

மரண தண்டனை விவகாரம் குறித்து மனித உரிமைகள் ஆணையம் கடந்த பத்து ஆண்டுகளில் அடுத்தடுத்து நடத்திய எல்லாக் கூட்டங்களிலும் நிறைவேற்றிய பல்வேறு தீர்மானங்களை நினைவுகூர்ந்தும், மரண தண்டனையை இன்னும் வைத்திருக்கும் நாடுகள் அனைத்தும் சட்டம் இயற்றி அதனை முழுமையாக ஒழிக்க வேண்டும் என்றும், அதற்கு முன் மரண தண்டனைகள் நிறைவேற்றப்படுவதை நிறுத்திவைக்க வேண்டும் என்றும் மனித உரிமைகள் ஆணையத்தின் கடைசித் தீர்மானமான 2005/59[iv] வலியுறுத்தியிருப்பதை *நினைவுகூர்ந்தும்,*

மரண தண்டனை ஒழிப்பு விவகாரம் தொடர்பாக முந்தைய மனித உரிமைகள் ஆணையம் கண்ட மற்ற முக்கியமான முடிவுகள், மனித உரிமைகள் சபை இந்த விவகாரத்தில் தொடர்ந்து பங்காற்ற வேண்டும் என்ற கருத்தோடு அது தெரிவித்த முடிவுகளையும் *நினைவுகூர்ந்தும்,*

மரண தண்டனையைப் பயன்படுத்துவது மனிதனின் மதிப்பைக் குலைக்கும் என்பதையும் மரண தண்டனை நிறைவேற்றப்படுவது நிறுத்திவைக்கப்படும்போது மனித உரிமைகள் சூழல் மேம்படும் என்பதையும், மரண தண்டனை வழக்கத்தில் இருந்தால் அது தண்டனை பயம் காரணமாக குற்றச்செயல்கள் குறையும் என்பதற்கு வலுவான ஆதாரம் இல்லை என்பதையும், தவறுதலாக மரண தண்டனை விதித்து அது நிறைவேற்றப்பட்டுவிட்டால், பிற்பாடு தண்டனையை மாற்றவோ, தவறை சரிசெய்யவோ வழி கிடையாது என்பதையும் *கருத்தில் கொண்டும்,*

மரண தண்டனைகளை நிறைவேற்றுவதை நிறுத்திவைப்பதாகவும் அதிகரிக்கும் எண்ணிக்கையில் நாடுகள் எடுத்துள்ள முடிவையும், அம்முடிவின் தொடர்ச்சியாக பல நாடுகள் மரண தண்டனையை ஒழித்ததையும் *வரவேற்றும், ஐ.நா. மன்ற பொதுச் சபையா*னது,

1. மரண தண்டனை தொடர்ந்தும் வழக்கத்தில் இருப்பது குறித்து *ஆழமான கவலையை வெளிப்படுத்துகிறது.*

2. மரண தண்டனையை பயன்பாட்டில் உள்ள நாடுகள்

(அ) மரண தண்டனையை எதிர்கொள்பவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்வதற்கான சர்வதேச தர அளவுகோள்களை மதித்து நடக்க வேண்டும், அதிலும் குறிப்பாக 25 மே 1984 தேதியிட்ட 1984/50 என்ற எண்ணுடைய பொருளாதார மற்றும் சமுதாய சபையின் தீர்மானத்துடன் வழங்கப்பட்ட சேர்க்கையில் விளக்கப்பட்டுள்ள

குறைந்தபட்ச அளவுகோள்களையாவது மதித்து நடக்க வேண்டும்.

(ஆ) மரண தண்டனையின் பயன்பாடு தொடர்பாகவும் மரண தண்டனையை எதிர்கொள்வோரின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்யும் நோக்கில் கடைப்பிடிக்கப்படும் விதிமுறைகள் குறித்தும் ஐ.நா.மன்ற தலைமைச் செயலருக்கு தகவல் வழங்க வேண்டும்.

(இ) மரண தண்டனையைப் பயன்படுத்துவதைக் மென்மேலும் குறைப்பதோடு, அத்தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றங்களின் எண்ணிக்கையையும் குறைக்க வேண்டும்.

(ஈ) மரண தண்டனையை முற்றாக ஒழிக்கும் நோக்கில் அத்தண்டனை நிறைவேற்றப்படுவதை நிறுத்திவைக்க வேண்டும். என்றும் *கேட்டுக்கொள்கிறது*.

3. மரண தண்டனையை ஒழித்துவிட்ட நாடுகள் அதை மீண்டும் அறிமுகப்படுத்தக்கூடாது என்று *கேட்டுக்கொள்கிறது*.

4. இந்தத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படுவது குறித்து பொதுச் சபையின் அறுபத்து மூன்றாவது கூட்டத்தொடரில் தலைமைச் செயலர் விபரங்கள் தெரிவிக்க வேண்டுமென்று *கேட்டுக்கொள்கிறது*.

5. இந்த விவகாரத்தை தனது அறுபத்து மூன்றாவது கூட்டத்தொடரில் தொடர்ந்து பரிசீலிப்பதென பொதுச்சபை *தீர்மானித்துள்ளது*.

---

[i] தீர்மான எண் 217 A(III).

[ii] காண்க தீர்மான எண் 2200 A(XXI), annex.

[iii] ஐக்கிய நாடுகள் சபை ஒப்பந்தங்களின் தொகுப்பு, நூல் 1577, எண். 27531.

[iv] காண்க பொருளாதார மற்றும் சமுதாய சபையின் அலுலகபூர்வ பதிவுகள், 2005, Supplement No. 3 and corrigenda (E/2005/23 and Corr.1 and 2), chap. II, sect. A.